1967 நவம்பர் 27]

ஆசிரியர்கள்

* 456 வினா.—திரு. கொ. இரா. ஞானசம்பந்தன் : மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு, மதிய உணவிற்கு நன் கொடை திரட்டுதல், பள்ளிச் சீரமைப்பிற்கு பொருள்கள் நன் கொடை திரட்டுதல் போன்ற பள்ளி அலுவல்களுக்குப் புறம்பான திட்டங்களில் ஆசிரியர்கள் ஈடுபடுவதினின்று தடுக்கப்பட்டு, போதனை முறையில் மட்டும் முழுக்கவனத்தையும் செலுத்த வகை செய்யும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பள்ளி அலுவல் நேரங்களில் ஆசிரியர்கள் குடும்பக்கட்டுப்பாடு, சிறு சேமிப்பு, மதிய உணவு, பள்ளிச் சீரமைப்பு போன்ற திட்ட வேலைகளில் ஈடு படக் கோரப்படுவதில்லை.

திரு. நா. காசிராமன் : மதிய உணவு பணிகளில் ஆசிரியர்கள் ஈடுபடுவதில்லை என்று சொன்னார்கள். கும்பகோணத்தில், 1,500 மாணவர்களுக்கு ஒரே மையமாக வைத்து வேலை செய்கிறோம். யாரும் நிலம் கொடுக்காவிட்டாலும், நகரசபையின் சார்பில் ஏற்றுச் செய்கிறோம். எல்லா நகரங்களிலும் மையமான இடத் தில் வைத்துச் செய்தால் நலமாக இருக்கும். அதைப் பற்றி அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கல்வி அமைச்சர் அளித்த பதிலிலிருந்து, சமையல் வேலையில் ஆசிரியர்கள் ஈடுபடுவது அதிகமாக இல்லை, அடியோடு தவிர்க்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. நான் குறிப்பிட்டது போல, கும்பகோணம் நகர சபைத் தலைவர் குறிப்பிட்டது போல, கும்பகோணம், காஞ்சீபுரம் போல மற்றவர்களும் செம்மையாக வேலை செய்ய வழி கோல வேண்டும் என்று தான் எதிர்பார்க்கிறேன்.

Dr. H. V. HANDE : Sir, in view of the fact that teachers are given extra work and practically they have to spend most of their time in attending to it, will this Ministry take this opportunity to give an assurance on the floor of the House whether they are going to grant the City Compensatory Allowance to the teachers also?

The Hon. Thiru C. N. ANNADURAI : Though there is no immediate connection between the two, the hon. Members know that the City Compensatory Allowance has been granted to teachers.

Thiru K. VINAYAKAM : Arising out of the answer given by the Hon. Chief Minister. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வருகிற புதன்கிழமையன்று கல்வியைப் பற்றி நீண்ட விவாதம் வரவிருக்கிறது. அப்பொழுது பேசிக்கொள்ளலாமே.

THIRU K. VINAYAKAM: My question arises out of the answer given by the Hon. Chief Minister. The Hon. Chief Minister has been pleased to state on the floor of the House that the City Compensatory Allowance has been granted to the teachers. Is he aware of the fact that it is not ganted to the teachers employed by private managements in the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI: I am sorry the hon. Member is not following the proceedings in the newspapers. I have assured them that.

மின் இறைவை பாசனத் திட்டங்கள்

*457 வினா—திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய எத்தனை மின் இறைவை பாசனத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன?

(இ) நடப்பு ஆண்டில் மேலும் எத்தனை திட்டங்கள், எங்கெங்கே நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1966-ம் ஆண்டு முடிய ஒன்பது (9) மின் இறைவைப் பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன?

(இ) 6 (ஆறு) திட்டங்கள் நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட இடங்களில் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளன.

(1) ஒக்கநாடு கீழயூர், ஒரத்தநாடு வட்டம்.

(2) ஐமூர், திருத்துறைப்பூண்டி வட்டம்.

(3) வளவனாறு விஸ்தரிப்பு, திருத்துறைப்பூண்டி வட்டம்.

(4) மங்கல், திருத்துறைப்பூண்டி வட்டம்.

(5) விளாங்காடு, திருத்துறைப்பூண்டி வட்டம்

(6) கீழ்த்தங்கையாறு, திருத்துறைப்பூண்டி வட்டம்.

திரு. செ. பாலசுப்ரமணியன்: வேளாங்கண்ணி இறைவைத் திட்டத்தைப் பொறுத்த வரையில், நல்ல நீரோடு கடல் நீர் புகுந்துவிடுவதால், மூன்று வருடங்களாக விவசாயிகளுக்குப் பிரயோசனம் இல்லாமல் இருந்தது. இப்பொழுதுதான் பயன் அடைந்திருக்கிறார்கள். இம்மாதிரி ஏற்படாமல் இருக்க, அரசாங்கம் இனியாவது ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்பொழுது செய்தது போலவே தொடர்ந்து செய்யும்.

திரு. கரு. சீமைச்சாமி: இதற்காகச் சர்க்காரால் கொடுக்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு? இதனால் எத்தனை ஏக்கர் நிலங்கள் அதிகமாக சாகுபடிக்கு வரும்?